முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

81 | T | I

දෙවන වාර විභාගය 2024
இரண்டாம் தவணைப் பரீட்சை 2024
Second Term Examination 2024

කෘෂිකර්මය හා ආහාර තාක්ෂණය I, II
விவசாயமும் உணவுத்தொழினுட்பமும் I, II
Agriculture & Food technology I, II

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය
மேலதிக வாசிப்பு நேரம்
Additional Reading time

මිනිත්තු 10යි
10 நிமிடம்
10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

விவசாயமும் உணவுத் தொழினுட்பமும் I

கவனிக்க :

1. **எல்லா வினாக்ககுக்கும் விடை எழுதுக.**
2. **இலக்கம் 01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**
3. **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் சரியான விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே (x) அடையாளமிடுக.**
4. **அவ்விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.**

01) குளத்தின் பிரதான பகுதியான கலிங்கள் தொட்டியின் மூலம் ஆற்றப்படும் பணி.
1) அணைக்கட்டைப் பாதுகாத்தல். 2) மேலதிக நீரை வெளியேற்றுதல்.
3) நீரின் அமுக்கத்தைக் கட்டுப்படுத்துதல். 4) விவசாயத் தேவைகளுக்கு நீரை வெளியேற்றுதல்.

02) பசுமைப்புரட்சி காரணமாக விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளது.
A- குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் தரக்கூடிய வித்துக்கள் அறிமுகம் செய்யப்பட்டது
B- அதிகளவு சேதனப்பசளைப் பயன்படுத்தப்பட்டமை
C- மேலதிக உணவுகளை சந்தைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கியமை
இக்கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றுக்கள்
1) A மற்றும் B 2) A மற்றும் C 3) B மற்றும் C 4) A , B மற்றும் C

03) அனுராதபுர யுகத்தில் முதன் முதலில் கட்டப்பட்ட குளம்
1) திஸாவாவி 2) கலாவாவி 3) நுவரவாவி 4) அபயவாவி

04). ஆயிரம் வயல்கள் காணப்பட்டமையால் வெல்லஸ்ஸ என அழைக்கப்பட்ட பகுதி ,
1) ஊவா மாகாணம் 2) மத்திய மாகாணம் 3) வடமேல் மாகாணம் 4) தென் மாகாணம்


05) உள்ளூர் உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு விவசாய திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு,
1)1822 2) 1960 3)1912 4) 1972

06). பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க,
1) தாதுசேனன் மன்னன் மின்னேரியாவின் தெய்வம் என அழைக்கப்பட்டான்
2) எலஹர கால்வாயினூடாக மின்னேரியா கந்தளாய் குளங்களுக்கு நீர் வழங்கப்படுகின்றது
3) எலஹர கால்வாய் பராக்கரமபாகு மன்னன்மூலம் அமைக்கப்பட்டது
4) திஸாவாவியிலிருந்து வெளியேறும் மேலதிக நீரை வெளியேற்றுவதற்கு யோதக் கால்வாய் அமைக்கப்பட்டது

07) சரியான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக மழைமானியின் புனல் நிலத்திலிருந்து எவ்வளவு உயரத்தில் காணப்படுதல் வேண்டும்,

1) 10 cm 2) 20 cm 3) 30 cm 4) 40 cm

08) காற்றுத்திசைகாட்டி அமைந்துள்ள விதம் படத்தில் காட்டப்பட்டுள்ளது இதன்படி காற்று வீசும் திசை



1) கிழக்கிலிருந்து மேற்கு 2) தெற்கிலிருந்து வடக்கு
3) வடக்கிலிருந்து தெற்கு 4) மேற்கிலிருந்து கிழக்கு

09). பூக்கள் பூப்பதற்கு சார்பளவில் குறுகிய பகற்காலம் தேவைப்படும் தாவரங்கள்

1) கரும்பு, கோப்பி, ஸ்ரோபரி 2) கரட், பீற், ராபு
3) தென்னை, மிளகாய், நெல் 4) தக்காளி, உருளைக்கிழங்கு, பீற்

10). இலங்கைக்கு மழை கிடைக்கும் முறை காலம் பயிர்ச்செய்கை போகம் என்பன காட்டப்பட்டுள்ள சரியான நிரை ,

	மழை கிடைக்கும் முறை	மழை கிடைக்கும் மாதம்	பயிர்ச் செய்கை போகம்
1)	முதலாம் இடைப்பருவபெயர்ச்சி மழை	டிசெம்பர்-பெப்ரவரி	பெரும்போகம்
2)	தென்மேல் பருவபெயர்ச்சி	மே-செப்தெம்பர்	சிறுபோகம்
3)	கூறாவளி மழை	ஒக்தோபர்-நவம்பர்	சிறுபோகம்
4)	வடகீழ் பருவபெயர்ச்சி	மே-செப்தெம்பர்	பெரும்போகம்

11) படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம்.



1) அமுக்கமாணி 2) ஈரமாணி
3) சூரிய ஒளிர்வுமாணி 4) ஞாயிற்று கதிர்ப்புமாணி

12) விவசாய சூழலியல் வலய வகைப்படுத்தலில் DL எனக் குறிப்பிடப்படுவது,

1) தாழ்நாட்டு ஈரவலயம் 2) தாழ்நாட்டு இடைவலயம்
3) தாழ்நாட்டு உலர் வலயம் 4) மேல்நாட்டு *இடைவலயம்*

13). தாவரப்போசனையை தாவரங்களுக்கு வழங்கும் ஊடகமாகத் தொழிற்படுவது,

1) மண்வளி 2) கற்றயன் பறிமாற்றக் கொள்ளலவு
3) மண்நீர் 4) மண் இழையமைப்பு

14). மண் துணிக்கைகள் சார்பளவில் மண்ணில் காணப்படும் விதத்திற்கமைய துணியப்படுவது,

1) மண் இழையமைப்பு 2) மண் கட்டமைப்பு 3) மண் ஆழம் 4) மண் நிறம்

15) மண் உருவாகும் செயற்பாட்டை சரியாகக் காட்டுவது,

1) பாறை → பாறை வானிலையழிதல் → தாய்ப்பாறைப் பொருள் → மண் உருவாதல் → மண்
2) பாறை → மண் உருவாதல் → தாய்ப்பாறைப் பொருள் → பாறை வானிலையழிதல→ மண
3) பாறை → பாறை வானிலையழிதல் → தாய்ப்பாறைப் பொருள் → மண→ மண் உருவாதல்
4) தாய்ப்பாறைப் பொருள் → பாறை வானிலையழிதல் → தாய்ப்பாறைப் பொருள் → மண்

16) தீப்பாறைக்கு உதாரணமாக அமைவது,

1) நைஸ் 2) மணற்கல் 3) கிரனைற்று 4) ஷேல்

17) மண் பக்கப்பார்வையில் மண் ஆழம் எனப்படுவது,

1) A மற்றும் B வலயங்களின் உயரம் 2) A B மற்றும் C வலயங்களின் உயரம்
3) A B C மற்றும் D வலயங்களின் உயரம் 4) A வலயம்

18) வகைப்படுத்தலுக்கு அமைய களிக் கணிப்பொருட்களின் விட்டம் ,

1) 2 mm விட அதிகம் 2) 2 mm – 0.2 mm
3) 0.2 mm – 0.02 mm 4) 0.002 mm விட குறைவு

19). மயிர்த்துளை நீர் சம்பந்தமான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளது.
A – புவியீர்ப்பு விசை காரணமாக கீழ்நோக்கிச் செல்லாது மேல்நோக்கி இழுக்கப்படும் நீர்.
B – தாவரங்கள் பயன்படுத்தக் கூடிய நீர்
C – மண்ணைச் சுற்றி மிக இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ள நீர்
இவற்றுள் சரியான கூற்றுக்கள்,

1) A மற்றும் B 2) B மற்றும் C 3) A மற்றும் C 4) A , B மற்றும் C

20) மண்ணில் மண்வளி காணப்படாத சந்தர்ப்பம் ,
1) நிரந்தர வாடலின் போது 2) நிரம்பல் நிலையின் போது
3) வயற்கொள்ளலவு நிலையின் போது 4) 50% வயற்கொள்ளலவின் போது

21) புடோல், கடலை, குரக்கன், என்பன உள்ளடக்கப்படும் தாவரக்குடும்பம் முறையே,
1) குக்கர்பிற்றேசியே, பெபேசியே, பொயேசியே 2) பெபேசியே, பொயேசியே குக்கர்பிற்றேசியே
3) குக்கர்பிற்றேசியே, , பொயேசியே, பெபேசியே 4) குக்கர்பிற்றேசியே, மல்வாசே, பொயேசியே

22) பழஈயைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவெடிக்கை,
1) குக்கர்பிற்றேசியே குடும்பப் பயிர்களைப் பயிரிட்டதன் பின்பு பெபேசியே குடும்பப்பயிர்களைப் பயிரிடல்
2) குக்கர்பிற்றேசியே குடும்பப் பயிர்களைப் பயிரிட்டதன் பின்பு குருசிபரே குடும்பப்பயிர்களைப் பயிரிடல
3) குக்கர்பிற்றேசியே குடும்பப் பயிர்களைப் பயிரிட்டதன் பின்பு மல்வாசே குடும்பப்பயிர்களைப் பயிரிடல்
4) குக்கர்பிற்றேசியே குடும்பப் பயிர்களைப் பயிரிட்டதன் பின்பு சொலனேசியே குடும்பப்பயிர்களைப் பயிரிடல்

23) பயிர் பயன்பாட்டின் அடிப்படையில் பயிர்களை வகைப்படுத்தும் போது பயறு, கௌப்பி, உளுந்து என்பன உள்ளடக்கப்படும் பயிர்த் தொகுதி,
1) காய்கறிப் பயிர்கள் 2) சுவைசரக்குப் பயிர்கள்
3) பருப்புவகைப் பயிர்கள் 4) பழப்பயிர்கள்

24) பின்வரும் பயிர்களிடையே எது புதர்ப் பயிராகக் காணப்படுகின்றது,
1) வெண்டி 2) பலா 3) கத்தரி 4) கறுவா

25) பயிரொன்றை நிலத்தில் தாபிப்பதற்கு முன்பாக மண்ணில் மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகளும் ,
1) ஆரம்பப் பண்படுத்தல் 2) முதற்பண்படுத்தல் 3) துணைப்பண்படுத்தல் 4) இடைப்பண்படுத்தல்

26) உலர்வலயத்திற்குப் பொருத்தமான பாத்தி வகை,
1) உயர்பாத்தி 2) வரம்புசால் பாத்தி 3) தனிநடுகைக்குழி 4) தாழ்பாத்தி

27). வரம்புசால் பாத்தியை தயாரிப்பதற்காகப் பயன்படுத்தக் கூடிய உபகரணம்,
1) சாலிடுகருவி 2) குப்பைவாரி 3) இரும்புக்கலப்பை 4) வட்டத்தட்டுக்கலப்பை

28) பயண்படுத்தும் சந்தர்ப்பத்திற்கமைய ஆரம்பப்பண்படுத்தல் உபகரணங்களைக் கொண்டுள்ள தொகுதி,
1) வட்டத்தட்டுக்கலப்பை, கைமுள்ளு, யப்பானிய திசைமாற்றும் கலப்பை
2) வட்டத்தட்டுக்கலப்பை, இறகுக்கலப்பை, யப்பானிய திசைமாற்றும் கலப்பை
3) வட்டத்தட்டுக்கலப்பை, இறகுக்கலப்பை, கைக்கரண்டி
4) மும்முனை ஊடுபண்படுத்திகள், இறகுக்கலப்பை, யப்பானிய திசைமாற்றும் கலப்பை

29) பயிர்தாபிப்பு முறைகளில் முக்கோண முறையில் பயிரிடப்படும் பயிர்,
1) மா 2) வாழை 3) தோடை 4) அன்னாசி

30) FMRC மேட்டுநில விதையிடு கருவியைப் பயன்படுத்தி தாபிக்கக்கூடிய பயிர் வகைகள் ,
1) சோளம், பயறு, சோயாஅவறை 2) நெல், சோளம், எள்
3) நெல், சோயாஅவறை, எள் 4) சோளம், நெல், பயறு

31) மண்ணுடன் சேர்த்து நாற்றைப் பெயர்ததெடுக்கக் கூடிய நாற்றுமேடை வகை,
1) துண்ட நாற்றுமைட 2)தாழ்நாற்று மேடை 3) சாடி நாற்றுமேடை 4) உயர்பாத்தி நாற்று மேடை

32) தட்டு நாற்றுமேடையைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளக்கூடிய நாற்று வகைகள் ,
1) பூசனி, பிபிஞ்சா, தக்காளி, கத்தரி
2) கலப்புப்பிறப்பாக்கப் பயிர்பேதங்கள், கோவா, கத்தரி, தக்காளி
3) கலப்புப்பிறப்பாக்கப் பயிர்பேதங்கள், கோவா, பாகல், கத்தரி
4) கோவா, பிபிஞ்சா, பாகல், கத்தரி

33) நாற்றுமேடை தொற்று நீக்குவதற்குப் பயன்படுத்தக்கூடிய சூழலுக்கு நேயமான முறை
1) எரித்தல் 2) சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தல்
3) இரசாயனமுறை 4) தூபமாக்குதல்

34) நோயற்ற நாற்றுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நாற்றுமேடை பராமரிப்பு முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளது.
A. நீர்ப்பாசனம்
B. களைகட்டுப்பாடு
C. இரசாயன முறையைப் பயன்படுத்தி தொற்றுநீக்குதல்
இவற்றுல் சரியான கூற்றுக்கள்

1) Aயும் Cயும் 2) Bயும் Cயும் 3) Aயும் Bயும் 4) Aயும் Bயும் Cயும்


35) நாற்றுமேடையை வன்மைப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவெடிக்கைகள்,
1) நாள்தோறும் நீர் பாய்ச்சுதல் 2) நீர்ப்பாசனம் செய்யும் காலத்தைக் குறைத்தல்
3) சூரியஒளி படும் காலத்தைக் குறைத்தல் 4) சூரிய ஒளிபடும் காலத்தை அதிகரித்தல்

36) மண்ணில் இருந்து நீர் வெளியேற்றப்படும் முறைகள் ,
1) ஓடுகால் அரிமானம் மற்றும் பரப்பரிமானம்
2) ஓடிவடிதல் மற்றும் ஓடுகால் அரிமானம்
3) ஆவியாதல் ஆவியுயீர்ப்பு மற்றும் ஆழஊடுவடிதல்
4) தெரிப்பரிமானம் மற்றும் ஓடிவடிதல்

37) மண்ணுக்கு மூடுபடையிடுவதற்காகப் பயன்படுத்தக் கூடிய இயற்கை மூடுபடைகளைக் கொண்ட தொகுதி,
1) பொலித்தீன், தும்புச்சோறு, கடதாசி 2) பொலித்தீன், மானாப்புல் மற்றும் தும்புச்சோறு
3) கடதசி, வைக்கோல், தென்னோலை 4) பொலித்தீன், வைக்கோல், தும்புச்சோறு

38) நிரல் நீர்பபாசனத்திற்குப் பொருத்தமான பயிர் வகைகள்,
1) சோயாஅவறை, பயறு, கௌப்பி 2) நெல், பயறு, மிளகாய்
3) பயறு, மிளகாய், கௌப்பி 4) சோயாஅவறை, சோளம், வாழை

39) படத்தில் காட்டப்பட்டுள்ள நீர்ப்பாசன முறை,
1) வரம்புசால் நீர்ப்பாசனம்
2) மோதிரவடிவ நீர்ப்பாசனம்
3) நிரல் நீர்ப்பாசனம்
4) பாத்தி நீர்ப்பாசனம்



40) நீர்ப்பாசன முறைகளில் மிகவும் வினைதிறனான நுன்நீர்ப்பாசன முறை,
1) துளி நீர்ப்பாசனம் 2) தூவல் நீர்ப்பாசனம் 3) நிரல் நீர்ப்பாசனம் 4) பாத்தி நீர்ப்பாசனம்

Past Papers Wiki

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

81 | T | II

දෙවන වාර විභාගය 2024
இரண்டாம் தவணைப் பரீட்சை 2024
Second Term Examination 2024

කෘෂිකර්මය හා ආහාර තාක්ෂණය I, II
விவசாயமும் உணவுத்தொழினுட்பமும் I, II
Agriculture & Food technology I, II

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

விவசாயமும் உணவுத் தொழினுட்பமும் II

- **முதலாம்** வினா உட்பட மேலும் **நான்கு** வினாக்களைத் தெரிந்து மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

01) வீட்டுத்தோட்டச் செய்கை மற்றும் உள்ளூர் வெளியூர் சந்தைகளை இலக்காகக் கொண்ட வர்த்தக ரீதியாக மேற்கொள்ளப்படும் நவீன விவசாயக் கோலம் தற்போது எமது நாட்டில் பெரும்பாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

i. போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆகியோரினால் நமது நாட்டில் அறிமுகப்படுத்திய பழப்பயிர்கள் 2 ஐக் குறிப்பிடுக.
ii. பிரித்தானியர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்கள் 4 ஐக் குறிப்பிடுக.
iii. சுதந்திர இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பலநோக்குத்திட்டங்கள் 2 ஐக் குறிப்பிடுக.
iv. பசுமைப்புரட்சியின் போது பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகள் 2 ஐ குறிப்பிடுக.
v. பயிர்ச்செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் காலநிலைக் காரணிகள் 2 ஐக் குறிப்பிடுக.
vi. மண்ணில் காணப்படும் மண்ணின் கூறுகள் 2 ஐக் குறிப்பிடுக.
vii. வீட்டுத்தோட்டச் செய்கையின் போது ஆரம்பப் பண்படுத்தலை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய கையால் இயக்கக் கூடிய உபகரணங்கள் 2 ஐக் குறிப்பிடுக.
viii. வீட்டுத்தோட்டத்தில் பயிர்களை தாபிக்கக் கூடிய 2 முறைகளைக் குறிப்பிடுக.
ix. நடுகைப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக நிலப்பண்படுத்தலின் போது தயாரிக்கக் கூடிய பாத்தி வகைகள் 2 குறிப்பிடுக.
x. மண் அரிப்பின் பாதகமான விளைவுகள் 2 ஐக் குறிப்பிடுக.


02) இலங்கையின் உணவுக்காப்பை மேற்கொளவதில் பிரதான பங்களிப்பைச் செய்வது விவசாயத்துறையாகும்.

i. (a) உணவுக்காப்பு என்றால் என்ன.
(b) உணவுக்காப்பில் செல்வாக்குச் செலுத்தும் 3 காரணிகளைக் குறிப்பிடுக.
ii. இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் பங்களிப்புச் செய்யும் பிரதான 3 துறைகளைக் குறிப்பிடுக.
iii. இலங்கையின் விவசாயத்துறைக்கான வாய்ப்புக்கள் 3 ஐக் குறிப்பிடுக.

03) பயிர்ச்செய்கையில் இருந்து உச்ச விளைச்சளைப் பெற்றுக்கொள்வதில் காலநிலைக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தகினறது

I. (a) A எனக்குறிப்பிடப்பட்டுள்ள உபகரணத்தின் பெயரைக் குறிப்பிடுக.
(b) A எனக்குறிப்பிடப்பட்டுள்ள உபகரணத்தின x , y பகுதிகளைக் குறிப்பிடுக.
(c) B உருவைப்பயன்படுத்தி குறித்த இடத்தின் சாரீரப்பதனைக் கணிக்க


A



B

II. குறித்த ஒரு பிரதேசத்தின் வெப்பநிலை மாறுபடுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3 ஐக் குறிப்பிடுக.

III. பயிரச்செய்கையில் காற்றினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் 3 ஐக் குறிப்பிடுக.

04) பயிர்ச்செய்கையின் போது மண்ணின் பௌதீக இரசாயன உயிரியல் இயல்புகள் செல்வாக்குச் செலுத்துகின்றது.

I. (a) மண் அமிலத்தன்மையடைவதற்கான இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக

(b) செங்கபில மண்ணின் இயல்புகள் 2 ஐக் குறிப்பிடுக.

II. (a) மண் இறுக்கமடைவதில் வெல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 2 ஐக் குறிப்பிடுக.

(b) மண் இறுக்கமடைவதனால் ஏற்படும் பிரதிகூலமான விளைவுகள் 2 ஐக் குறிப்பிடுக.

III. (a) மண் அரிப்புக் காரணிகள் 2 குறிப்பிடுக.

(b) மண்ணரிப்பின் போது மண் துணிக்கைகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறாக்கப்படுவதைக் குறைப்பதற்கு பயன்படுத்தக்கூடிய முறைகள் 2 குறிப்பிடுக.

05) நச்சுப்பதார்த்தங்கள் அற்ற மரக்கறிகளையும் பழங்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே இடம் வீட்டுத்தோட்டமாகும்.

I. (a) சாடி நாற்றுமேடைக்காகப் பயண்படுத்தக் கூடிய பொருட்கள் 4 குறிப்பிடுக.

(b) நாற்றுமேடையின் முக்கியத்துவங்கள் 2 குறிப்பிடுக.

II. (a) நாற்றுமேடைக்குப் பொருத்தமான இடத்தை தெரிவு செய்யும்போது கவணிக்க வேண்டிய விடயங்கள் 2 ஐப் பெயரிடுக.

(b) நாற்றுமேடைக்குப் பயன்படுத்தக் கூடிய நாற்றுமேடை ஊடகத்தைக் குறிப்பிடுக

III. நாற்றுமேடையை அமைக்கும் போது பின்பற்ற வேண்டிய பொதுவான படிமறைகள் 4 ஐக் குறிப்பிடுக.

06) சரியான முறையில் நிலப்பண்படுத்தலை மேற் கொள்ளும் போது மண்ணின் பௌதீக இரசாயன உயிரியல் இயல்புகள் விருத்தியடைகின்றது.

I. (a) நிலப்பண்படுத்தலால் மண்ணில் விருத்தியடையும் பௌதீக இயல்புகள் 2 குறிப்பிடுக.

(b) நிலப்பண்படுத்தலின் நோக்கங்கள் 4 ஐக் குறிப்பிடுக

II. (a) இடைப்பண்படுத்தலின் போது பயன்படுத்தக் கூடிய 4 உபகரணங்களைக் குறிப்பிடுக

(b) ஆரம்பப் பண்படுத்தலின் பிரதான 2 படிமுறைகளையும் குறிப்பிடுக.

III. பயிர் தாபிப்பின் போது சரியான பயிரிடைவெளி ஆழம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் 2 அனுகூலங்களைக் குறிப்பிடுக.

07) பயிர்ச் செய்கை நடவெடிக்கைகளின் போது நீர்ப்பாசனம் மிகவும் முக்கியமானதாகும்.

I. (a) மேற்பரப்பு நீர்ப்பாசன முறைகள் 2 ஐக் குறிப்பிடுக.

(b) நீர்ப்பாசன முறையைத் தீர்மானிக்கும் போது கவணிக்க வேண்டிய அம்சங்கள் 2 ஐக் குறிப்பிடுக.

II. தூவல் முறை நீர்ப்பாசனத்தின் பிரதிகூலங்கள் 3 ஐக் குறிப்பிடுக.

III. குறைவான நீர் வடிப்பு காரணமாக எற்படும் பிரச்சிணைகள் 2 ஐக் குறிப்பிடுக.

.

PAST PAPERS WIKI

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

දෙවන වාර විභාගය 2024
இரண்டாம் தவணைப் பரீட்சை 2024
Second Term Examination 2024

Agriculture I, II

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

விடைப்பத்திரம்

பகுதி I

01	3	11	4	21	1	31	1
02	2	12	1	22	1	32	2
03	4	13	3	23	3	33	2
04	1	14	1	24	4	34	3
05	3	15	1	25	1	35	4
06	2	16	3	26	4	36	3
07	3	17	2	27	1	37	3
08	4	18	4	28	2	38	1
09	1	19	1	29	2	39	4
10	2	20	2	30	1	40	1

பகுதி II

(01) 1. அன்னாசி பப்பாசி தூரியன் றம்புட்டான் மங்குஸ்த்தான்
2. தேயிலை தெண்ணை இறப்பர் கோப்பி
3. கல்லோயா, உடவளவை, மகாவலி, இங்கினிமிட்டிய, நில்வளகங்கை, லுணுகம்வெகர
4. செயற்கைப் பசளைகள், விவசாய இரசாயனங்கள், புதிய பயிர்ப்பேதங்கள், நவீன இயந்திரம்
5. மழை, காற்று, வெப்பம், சாரீரப்பதன், சூரியஒளி
6. மண்வளி, மண்கனிப்பொருள், மண்நீர், மண்சேதனப்பொருள்,மண்அங்கி
7. மண்வெட்டி, முள் மண்வெட்டி, மிதிமுள்ளு
8. வித்துக்களை நடுதல், வித்துக்களை விதைத்தல், நாற்றுக்களை நடுதல். பதியப்பாகங்களை நடுதல்
9. தனிநடுகைக்குழி, உயர்பாத்தி, தாழ்பாத்தி. வரம்புசால் பாத்தி
10. வளமான மேல் மண் எடுத்துச் செல்லப்படும்
மரங்கள் அடியோடு சாய்தல்
விவசாய காணிகளின் பெறுமதி குறைதல்
நீர் நிலைகளின் கொள்ளலவு குறைதல்
வெள்ளப்பெருக்கு
விவசாய உபகரணப் பயன்பாடு கடினம்

(02) i a - தேவையான சந்தர்ப்பத்தில் தேவையான அளவில் தரமான உணவைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல்
b - உணவின் கிடைப்புத்தன்மை,அணுகத்தகு ஆற்றல், பண்படுத்தல்
ii a- விவசாயம் கைத்தொழில் சேவை
iii a- பொருத்தமான சூழல், வளங்கள் காணப்படுதல், விரிவாக்க சேவைகள் காணப்படுதல்,சந்தைவாய்ப்பு, உட்கட்டமைப்பு வசதி

(03) i a- ஈரஉலர் குமிழ் வெப்பமானி
b- x- உலர்குமிழ் வெப்பமானி y- ஈரக்குமிழ் வெப்பமானி
c- 30 – 28 = 2 → சாரீரப்பதன் 85%

ii குத்துயரம், கடலில் இருந்துள்ள தூரம், தாவரவர்க்கம், மனித செயற்பாடுகள், உள்நாட்டு நீர்நிலைகளின்அளவு.மத்திய கோட்டிலிருந்துள்ள தூரம்

iii a- ஒளித்தொகுப்பு அதிகரிக்கும்,மகரந்தச்சேர்க்கைக்கு உதவும், கனியுப்பு நீர் அகத்துரிஞ்சல் அதிகரிக்கும், வித்துப்பரம்பலுக்கு உதவும்

(04) i a- மண்அரிப்பு, அமிலமழை, சேதன அமிலங்கள் உருவாதல்

b- வளமான மண், ஆழம் குறைவானது, செங்கபில நிறம், ph பெறுமானம் 5.5 – 7 சேதனப்பொருட்களின் அளவு

ii a- பாரிய இயந்திரங்களின் நடமாட்டம் தொழிலாளர்கள் அடிக்கடி நடத்தல் ஒரே ஆழத்தில் உழுதல்

b- தாவர வேர் சுவாசம் பாதிக்கப்படும் மண்ணங்கிகளின் சுவாசம் பாதிக்கப்படும்
வேர் வளர்ச்சி பாதிக்கப்படும் சேதனப் பொருள் பிரிகை தடைப்படும்
உழவு இயந்திரங்களை பயன்படுத்துவது கடினம்
மண்ணீர் ஊடுவடியும் அளவு குறையும்

iii a- மழை, காற்று, கடல்அலை, மனித விலங்கு நடவெடிக்கை

b- மண்ணை மூடி வளரும் தாவரங்களைப் பயிரிடுதல் மூடுபயிர்களை வளர்தத்தல்
மூடுபடை இடுதல் களைகளின் அங்குரத் தொகுதியை மட்டும் வெட்டுதல்

(05) i a- யோகட்கோப்பை,தயிர்ச்சட்டி, சிரட்டை, உரிமட்டை, பொலித்தின்,வாழைமடல்,கடதாசி

b- நாற்றுக்களுக்குத் தேவையான சூழல் நிலைமைகளை வழங்கலாம்
வீரியமான நோயற்ற தாவரங்களைப் பெறலாம்
ஒட்டுக்கட்டைகளைப் பெறலாம்
சீரான வளர்ச்சியுள்ள நாற்றுக்களைப் பெறலாம்
நாற்றுமேடையில் இளம் நாற்றுக்களை இலகுவாகப் பராமிரிக்கலாம்

ii a- அவதானிக்கக் கூடிய இடம் ஒளி கிடைக்கும் இடம்
சமதறையான இடம் நீர்வடிப்புள்ள இடம்
நீர் வசதியுள்ள இடம்
நோயற்ற இடம்
போக்குவரத்து வசதியுள்ள இடம்
அதிகளவு காற்று வீசாத இடம்

b- அரித்த மேல்மண் மற்றும் அரித்த சேதனப் பசளை

iii a- பொருத்தமான இடத்தை தெரிதல்
ஊடகத்தை தயாரித்து நாற்றுமேடை அமைத்தல்
தொற்று நீக்குதல்
நடுகைப் பொருட்களைத் தாபித்தல்

(06) i a- மண் கட்டமைப்பு, மண் காற்றோட்டம், நீர்வடிப்பு

b- முதற்பண்படுத்தல் துணைப்பண்படுத்தல்

ii a- கைமுள், கைக்கரண்டி, மண்வெட்டி, யப்பானிய சுழல் களைகட்டி, ஹரோவகை

b - முதற்பண்படுத்தல் துணைப்பண்படுத்தல்

iii a- கிளைகள் வளர்வதற்கான இடவசதி கிடைக்கும்
வேர் வளர்வதற்கான இடவசதி கிடைக்கும்
போட்டி குறையும்
நோய்பீடைத்தாக்கம் குறையும்
நிலம் வினைதிறனாகப் பயன்படுத்தப்படும்

(07) i a- பரவல்,நிரல், பாத்தி,சால்


b- பொருத்தமான விடைகளுக்குப் புள்ளி வழங்குக

ii a- அதிகசெலவு,தொழினுட்ப அறிவு தேவை, சக்தி தேவை, உயரமான தாவரத்திற்குத் பொருத்தமற்றது, அடைப்பு ஏற்படும், அதிக காற்றுள்ள பகுதிக்குப் பொருத்தமற்றது, இடைப்பண்படுத்தல் கடினம்,மகரந்தம் கழுவிச் செலச்லப்படும்

iii a- பொருத்தமான விடைக்குப் புள்ளிகள் வழங்குக

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

10 ශ්‍රේණිය කෙටි සටහන් පොත් සංශෝධිත නව විෂය නිර්දේශයේ පාඩමෙන් පාඩමට



Rs : 300




Rs : 300




Rs : 300



Rs : 300



Rs : 150



Rs : 150



Rs : 150




Rs : 150




Rs : 150




Rs : 200



Rs : 300



Rs : 350



Rs : 300




Rs : 300



Rs : 150



Rs : 200



Rs : 150



Rs : 300




Rs : 300




Rs : 300

මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180

LOL.LK
LOL STORE (PVT) LTD
CASH ON DELIVERY
VISA
mastercard
KOKO
037 20 60 110
071 77 74 440
Buy Now
CLICK HERE